TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044341

1. District மாவட்டம் : Kanyakumari  PS காவல்நிலையம்: V&AC Nagercoil  Year ஆண்டு: 2021  FIR No. மு.த.அ. எண்: 7/2021  Date நாள்: 01.10.2021

2. (i) Act சட்டம்: CrPC  Sections பிரிவுகள்: 102 and 7 of the P.C Act 1988 (Amended in 16/2018)

(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: The PC Act 1988 (Amended in 2018)  Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from நாள் முதல் : 30.09.2021  Date to நாள் வரை :

Time Period நேர அளவு :  Time from நேரம் முதல் :  Time to நேரம் வரை :

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 14.15 hrs  Time நேரம் : 00.50 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 01.10.2021  Time நேரம் : 13.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக  எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும்  About 10 Kms East, RTO Office Nagercoil

Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்  District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்  D.Amirtha Raj  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்  Tr.M.Daniel

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 18.10.1973  (d) Nationality : நாட்டினம் Indian  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Head Assistant / Deputy Tahsildar  (g) Address : முகவரி  Collectorate, Nagercoil, Kanyakumari District

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**.Tr.K.Chandrasekar, RTO Nagercoil 2.Tmt.N.Fathima Barvin, MVI Gr-1, RTO Nagercoil, 3. Tr.C.Nagarajan /o Chithambara pillai, Chenthooran Nager, Kottar, 4.Tr.C.Manikkavasagam, S/o ChekkalingaPillai, Amman Koil St, Therkkur, Thovalai, 5.Tr.B.Ganesan, S/o Balasubramaniam, Nadutheru, Erachakulam, .Tr.G.Aravind, S/o Ganesan, Puthu St, Pallavilai, Nagercoil.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

Nil

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Accused
.Tr K.Chandrasekar,
RTO, Nagercoil

.Tmt.N.Fathima Barvin,
MVI Gr-1,
TO Nagercoil.

.Tr.C.Nagarajan
/o Chithambara pillai,
Chenthooran Nager,
Kottar.

.Tr.C.Manikkavasagam,
o ChokkalingaPillai,
mman Koil St, Therkkur,
hovalai.

.Tr.B.Ganesan,
/o Balasubramaniam,
Vadutheru, Erachakulam,
.Tr.G.Aravind,
/o Ganesan, Puthu St,
allavilai, Nagercoil.

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:- இன்று 01.10.2021-ம் தேதி மதியம் 13.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், S.பீட்டர் பால் துரை ஆகிய நான் நிலையத்தில் பணியிலிருந்த போது திரு.D.அமிர்தராஜ், தலைமை உதவியாளர் (ஒ-பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள்.30.09.2021யும் மற்றும் நகல் ஆவணம் இணைத்து நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:. அனுப்புநர், டே.அமிர்தராஜ், தலைமை உதவியாளர்(ஒ-பிரிவு), மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம். பெறுநர், உயர்திரு.காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாகர்கோவில். அய்யா, பொருள்:- திடீர் இணை ஆய்வு -நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலக திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது– மேல்நடவடிக்கை எடுக்க கேட்டல் தொடர்பாக.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ....திருமதி.C.சிவசங்கரி,. பதவி காவல்..ஆய்வாளர்... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

01/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

1.10.2021

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 01.02.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ......S.பீட்டர் பால் துரை.
Rank: நிலை .....காவல்.... துணை .........
கண்காணிப்பாளர்,
ஊ.த.க பிரிவு,
கன்னியாகுமரி மாவட்டம்

**முதல் தகவல் அறிக்கை தொடர்ச்சி பக்கம் -3**

நான் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தலைமை உதவியாளராக (ஒ-பிரிவு) பணிபுரிந்து வருகிறேன். நான் நேற்று 30-09-2021 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்த போது சுமார் 12.00 மணியளவில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர்(பொது) அவர்கள் என்னை அழைத்து நாகர்கோவில் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளரிடம் அறிக்கை செய்ய தெரிவிக்கப்பட்டதின் பேரில் நேற்று (30-09.2021) மாலை 12.30 மணியளவில் தங்களிடம் நான் அறிக்கை செய்தேன். அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய தாங்கள் என்னிடம் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் நடைபெறும் பணிகளுக்கு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சந்திரசேகர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.பாத்திமா பர்வீன் ஆகியோர்கள் புரோக்கர் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகன உரிமையாளர்கள் மற்றும் ஓட்டுநர் உரிமம் பெற வரும் பொதுமக்களிடம் அந்த வேலைகளை செய்து கொடுக்க லஞ்சம் பெற்று வருவதாக ரகசிய தகவல்கள் கிடைத்து இருப்பதாகவும் அதன் பேரில் மேற்படி அலுவலகத்தை திடீர் இணை ஆய்வு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.பீட்டர் பால் துரை, ஆய்வாளர் திருமதி.T.T.ரெமா மற்றும் போலீஸ் பார்ட்டியுடன் விசுவாசபுரத்தில் அமைந்திருக்கும் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு நேற்று (30.09.2021) பிற்பகல் 02.15 மணிக்கு சென்றடைந்து திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வானது 30.09.2021 பிற்பகல் 02.15 மணியளவில் துவங்கி 01.10.2021 அதிகாலை 00.50 மணியளவில் முடிவுற்றது. ஆய்வின் போது மேற்படி அலுவலகத்தின் கிழக்கு பக்க சுவரை ஒட்டி மதில் சுவரினுள் தரையில் கிடந்த ரூ.30,600/-ம், அலுவலக ஹாலின் நடுவே (பதிவறையின் எதிரே) இருந்த மரத்தாலான Rack-ல் சுருட்டி வைக்கப்பட்டிருந்த ரூ.1200/-ம், TNSTC பணியாளர்கள் அமர்ந்து அவர்கள் வாகனங்களுக்கு உரிய FC மற்றும் வரி செலுத்தும் வேலை செய்யும் மேஜையில் இருந்து ரூ.4050/--ம் அலுவலக

பின்புற (வடகிழக்கு) ஷட்டர் அருகில் வைக்கப்பட்டிருந்த அட்டைப்பெட்டியினுள் இருந்த ரூ.35,350/-ம், புரோக்கர் திரு.நாகராஜன் என்பவரை விசாரணை செய்து கிடைக்கப் பெற்ற ரூ.68,000/-மும், திரு.மாணிக்கவாசகம் என்பவரிடம் ரூ.12,500/-ம் திரு.கணேசன் என்பவரிடம் ரூ.2000/-மும் மற்றும் திரு.அரவிந்தன் என்பவரிடம் ரூ.11,300/- கைப்பற்றப்பட்டு விசாரணை செய்யப்பட்டதில் ஆவணங்கள் மற்றும் தகுந்த முகாந்திரம் ஏதும் கூறாததால் டிரைவிங் லைசென்ஸ், வாகனப் பதிவு போன்ற RTO அலுவலக பணிகளுக்காக வரும் நபர்கள்/புரோக்கர்கள் அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்கு கொண்டு வந்த பணமாக இருக்கலாம் என கருதி மேற்படி மொத்தப் பணம் ரூ.1,65,000/- (ஒரு லட்சத்து அறுபத்தி ஐந்தாயிரம்) திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் இணை ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,65,000/-, தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை மற்றும் கைப்பற்றப்பட்ட வட்டார போக்குவரத்து அலுவலக நகல் ஆவணங்களையும் இத்துடன் இணைத்து சமர்பித்துள்ளேன். சம்மந்தப்பட்ட அலுவலர்கள் RTO திரு. சந்திரசேகர், மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி. பாத்திமா பர்வீன் மற்றும் புரோக்காகளாக செயல்பட்டு வந்த திரு.நாகராஜன், திரு.மாணிக்கவாசகம், கணேசன், அரவிந்தன் ஆகியோர்கள் மீது நடவடிக்கை எடுக்க பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். தங்கள் பணிவுள்ள, ஒப்பம். டே..அமிர்தராஜ், 01.10.2021, தலைமை உதவியாளர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாகர்கோவில். Sir, Received the complaint on 01.10.2021 at 13.00 hrs along with proceedings, seized unaccounted cash money Rs.1,65,000/- and copy of the documents and registered a case in Ngl V&AC Cr.No. 7/2021 u/s 102 Cr.PC r/w 7 of PC Act 1988 (As amended in 2018) Sd/- S.Peter Paul Durai, 01.10.2021, Deputy Supdt.of Police, V&AC, Nagercoil. தலைமை உதவியாளர்/துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் அவர்களின் செயல்முறை நடவடிக்கை 30-09-2021ம் தேதி பிற்பகல் 14.15 மணியளவில் கன்னியாகுமரி மாவட்டம் விஸ்வாசபுரத்தில் அமைந்துள்ள நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கீழ்க்கண்ட அலுவலர்கள்

முன்னிலையில் நடைபெற்ற இணை ஆய்வின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கை குறிப்பு. முன்னிலை:திரு.D.அமிர்தராஜ்,தலைமை உதவியாளர்/துணை வட்டாட்சியர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில்.1).திரு.S.பீட்டர் பால் துரை, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி மாவட்டம் (இருப்பு) நாகர்கோவில். 2).திருமதி.T.T.ரெமா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, கன்னியாகுமரி பிரிவு, நாகர்கோவில். நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அங்கு தங்களது பணிகள் நிமித்தம் வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு வேலைகளை செய்து முடிப்பதற்கு இடைதரகர்கள் மூலமாகவும் நேரடியாகவும் லஞ்சம் பெற்று வருவதாக ரகசிய தகவல் கிடைத்ததன் அடிப்படையில் இன்று 30.09.2021-ம் தேதி மதியம் 14.15 மணிக்கு நாகர்கோவில்-திருநெல்வேலி ரோட்டில் தோவாளை தாலுகா விசுவாசபுரத்தில் அமைந்திருக்கும் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் கன்னியாகுமரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை காவல் துணை கண்காணிப்பாளர் திரு.S.பீட்டர் பால் துரை ஆய்வாளர் திருமதி.T.T.ரெமா ஆகியோர் முன்னிலையில் தலைமை உதவியாளர்/துணை வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம் இருப்பு நாகர்கோவில் திரு.D.அமிர்தராஜ் அவர்களால் திடீர் தணிக்கை செய்யப்பட்டது. சோதனையின்பொழுது வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.K.சந்திரசேகர், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திருமதி.N.பாத்திமா பர்வீன், நேர்முக உதவியாளர் திருமதி.A.ஆரோக்கிய செல்வி, அலுவலக கண்காணிப்பாளர்கள் திருமதி. V.டெய்சி நேசம், திருமதி.V.பிரேமா மற்றும் திரு.S.ஆரோக்கிய ஜெகதீசன் கணக்கர் செல்வி.R.ஷாலினி, உதவியாளர்கள் திரு.K.அசோக்குமார், திருமதி. K.சஜிதா, இளநிலை உதவியாளர்கள் திரு.N.G.வினோத்குமார், செல்வி. G.கிருஷ்ணபிரியா தட்டச்சர்கள் திரு.P.அலெக்ஸ் சாமுவேல் ராஜா, திரு.K.காளிராஜ், பதிவறை எழுத்தர் திரு.S.சாலோவேதபிரின்ஸ், அலுவலக

உதவியாளர் திரு.சி.அனந்தகிருஸ்ணன் மற்றும் எல்காட் பணியாளர்கள் திரு.சிவகுமார், திருமதி.சர்மிளா ஓட்டுநர் திரு.P.பால்ராஜ் ஆகியோர்கள் ஆஜரில் இருந்தனர். அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வந்த அலுவலர்கள் மற்றும் எல்காட் ஊழியர்களின் வருகை பதிவேடுகளை பார்வையிட்டதில் அனைவரும் ஆஜரில் உள்ளதாக உள்ளது. இந்த இரண்டு வருகை பதிவேடுகளும் இளநிலை உதவியாளர் செல்வி.G.கிருஷ்ணபிரியா கண்காணிப்பாளர் திரு.S.ஆரோக்கிய ஜெகதீசன் மற்றும் நேர்முக உதவியாளர் திருமதி.A.ஆரோக்கிய செல்வி மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.சந்திரசேகர் முடிவு செய்து மேலொப்பம் செய்துள்ளனர். இதில் துணை ஆய்வு குழு அலுவலர் தணிக்கை செய்து சுருக்கொப்பம் செய்தார்கள். நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகமானது தோவாளை தாலுகா விசுவாசபுரத்தில் நாகர்கோவில்-திருநெல்வேலி ரோடுக்கு வடக்கு பக்கம் SRP Agencies என்ற பெயரில் உள்ள பெட்ரோல் பங்கின் வடக்கு பக்கம் வாடகை கட்டிடத்தில் மேற்கு நோக்கி அமைந்துள்ளது. தரை தளம் மற்றும் முதல் தளம் கொண்ட இந்த கட்டிடத்தில் தரைத்தளத்தில் மட்டும் இயங்கி வரும் இந்த அலுவலகத்தில் நுழைந்தவுடன் அமைந்துள்ள ஹாலில் முதலில் இடது பக்கம் வரவேற்பறையுடன் இணைந்து கண்காணிப்பாளர் திருமதி.பிரேமா அவர்களின் அறை உள்ளது. அதை தொட்டு இரண்டு online ல் Fee செலுத்த பதிவு செய்யும் கேபின்களும் அதை தொட்டு ஓட்டுநர் உரிமம் Scrutiny செய்யும் கேபினும் அதை தொட்டு கண்காணிப்பாளர் திருமதி. V.டெய்சி நேசம், அவர்களின் அறையும், அதை தொட்டு வடக்கு பார்த்த Shutter கதவும் அதை தொட்டு தெற்கு பக்கம் வடக்கு பார்த்து Record clerk-ன் மேஜையும் அமைந்துள்ளது. அந்த Shutter-ன் கிழக்கு பக்கம் LLR Room- அதை தொட்டு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி Elcott room-ம் அதை தொட்டு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி Class Room-ம் அதை தொட்டு தெற்கு பக்கம் மேற்கு நோக்கி மோட்டார் வாகன ஆய்வாளர்களின் அலுவலக அறையும் உள்ளது. இந்த கட்டிடத்தின் மேற்கு நோக்கிய நுழைவாசலின் வலது பக்கம் கிழக்கு நோக்கி முதலில் நேர்முக உதவியாளர் அறையும் அதை தொடர்ந்து வடக்கு பார்த்த வாசல் கொண்ட வட்டார போக்குவரத்து அலுவலரின் அலுவலக அறையும், அதை தொட்டு கிழக்கு பக்கம்

வடக்கு நோக்கி Computer Server அறையும் அதனை தொடர்ந்து ஆவண காப்பக அறையும் அமைந்துள்ளது. மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் இருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் திருமதி.N.பாத்திமா பர்வீன் அவர்களையும் அந்த அறையும் தணிக்கை செய்யப்பட்டது. அதில் கொடி நாள் வசூல் பதிவேட்டை பார்வையிட்டதில் இன்று (30.09.2021) வசூல் மொத்தம் ரூபாய் 1,700/- என பதியப்பட்டிருந்தது. அந்த பணத்தை பற்றி மோட்டார் வாகன ஆய்வாளரிடம் கேட்டபோது மேற்படி ரூ.1,700/- யை கணக்கர் செல்வி.R.ஷாலினி அவர்களிடம் ஒப்படைத்துவிட்டதாக தெரிவித்தார். கணக்கர் செல்வி.R.ஷாலினி அவர்களை அழைத்து கேட்டபோது இன்றைய வசூல் தொகை ரூ.1,700/- மற்றும் நேற்றைய வசூல் தொகை ரூ.2,500/- சேர்த்து மொத்தம் ரூ.4,200/- இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் அந்த பணத்தை ஆஜர் செய்ய சொன்னதன் பேரில் ஆஜா செய்த பணத்தை எண்ணிபார்த்த போது மேற்குறிப்பிட்ட தொகை ரூ.4,200/- சரியாக இருந்த படியால் அந்த பணம் செல்வி.R.ஷாலினியிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் தணிக்கையின் பொழுது அலுவலர்கள் பணம் வைத்திருக்கும் பணத்தை குறிக்கும் cash in hand register பார்வையிட்டதில் அலுவலக உதவியாளர் திரு.சி.அனந்தகிருஸ்ணன் ரூ.400/-ம், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திருமதி.N.பாத்திமா பர்வீன் ரூ.200/-ம், இளநிலை உதவியாளர்கள் திரு.N.G.வினோத்குமார் ரூ.220/-ம், பதிவறை எழுத்தர் திரு.S.சாலோவேதபிரின்ஸ் ரூ.440/-ம், தட்டச்சர்கள் திரு.P.அலெக்ஸ் சாமுவேல் ராஜா ரூ.250/-ம், கணக்கர் செல்வி.R.ஷாலினி ரூ.500/-ம், ஓட்டுநர் திரு.P.பால்ராஜ் ரூ.700/- திரு.K.காளிராஜ் ரூ.2580/-ம், திருமதி.டெய்சிநேசம் ரூ.3200/-ம், உதவியாளர்கள் திரு.K.அசோக்குமார் ரூ.400/-ம், செல்வி.G.கிருஷ்ணபிரியா ரூ.3250/-ம், திருமதி.V.பிரேமா ரூ.300/-ம், திருமதி. K.சஜிதா ரூ.250/-ம், திரு.S.ஆரோக்கிய ஜெகதீசன் ரூபாய் ஏதும் இல்லை என்று குறிப்பிட்டும் திருமதி.A.ஆரோக்கிய செல்வி ரூ.1400/- ம் வைத்துள்ளதாக பதிந்துள்ளது. பணியாளர்களை சோதித்து பார்த்ததில் அந்த பதிவேடில் கூறியபடி பணம் சரியாக இருந்தது. சரி பார்க்கப்பட்ட

பின் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. இந்த பதிவேட்டில் துணை ஆய்வுகுழு அலுவலர் தனிக்கை செய்து சுருக்கொப்பமிட்டார். இந்த திடீர் சோதனையின் பொழுது மேற்படி நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் கீழ்கண்டவாறு சரியான முகாந்திரம் தெரிவிக்கபடாத பணம் கைப்பற்றப்பட்டது. வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் வெளியே கிழக்கு பக்கம் தரையில் ஒரே கத்தையாக பணம் காணப்பட்டது. அதை எடுத்து எண்ணி பார்த்ததில் ரூ.30,600/- இருந்தது அந்த பணத்தை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் ஊழியர்களிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு தெரியாது என்றார்கள். எனவே தகுந்த முகாந்திரம் இல்லாததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-Vல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் வட்டார போக்குவரத்து அலுவலக வடகிழக்கு பக்கமுள்ள வடக்கு பார்த்த இரும்பு Shutter க்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அட்டை பெட்டியினுள் கத்தையாக மடித்து ரப்பர்பேன்ட் போடப்பட்ட நிலையில் மூன்று பணக்கட்டுகள் காணப்பட்டது. அவற்றை எடுத்து எண்ணி பார்த்ததில் ரூ.35,350/- இருந்தது அந்த பணத்தை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் ஊழியர்களிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு தெரியாது என்றார்கள். எனவே தகுந்த முகாந்திரம் இல்லாததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-VIIIல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது.மேலும் அலுவலகத்தை சோதனை செய்ததில் அலுவலகத்தின் ஹாலின் நடுவே பதிவறைக்கும் எதிர்புறம் போடப்பட்டிருந்த மரத்தாலான ரேக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த பதிவேடுகளுக்கு இடையே பணம் சுருட்டி வைக்கப்பட்டிருந்தது. பணத்தையை எடுத்து எண்ணி பார்த்ததில் மொத்தம் ரூபாய் ரூ.1200/- இருந்தது. அந்த பணத்தை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் ஊழியர்களிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு தெரியாது என்றார்கள். எனவே தகுந்த முகாந்திரம் இல்லாததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து

கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-VI ல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்தை சோதனை செய்ததில் அலுவலகத்தின் ஹாலின் நடுவே போடப்பட்டிருந்த TNSTC பணியாளர்கள் தங்களுடைய பேருந்துகளுக்கு தகுதிச்சான்று, அனுமதி சீட்டு, வரி செலுத்துவது போன்ற பணிகள் செய்ய போடப்பட்டிருந்த மேஜையிலிருந்த பேப்பர்களுக்கு இடையே கத்தையாக ரூபாய் காணப்பட்டது. அந்த பணத்தையை எடுத்து எண்ணி பார்த்ததில் மொத்தம் ரூபாய் ரூ.4050/- இருந்தது. அந்த மேஜையில் TNSTC பணியாளர்கள் யாருமில்லை. அந்த பணத்தை பற்றி வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் ஊழியர்களிடம் விசாரித்தபொழுது அந்த பணம் பற்றி தனக்கு தெரியாது என்றார்கள். எனவே தகுந்த முகாந்திரம் இல்லாததால் அந்த பணம் பொது மக்களிடம் அவர்களது பணிகளை செய்து கொடுப்பதற்காக லஞ்சமாக பெற்ற பணமாக இருக்கலாம் என கருதி அந்த நோட்டுகள் Annexure-VII ல் குறிப்பிட்டு இந்த மகசரில் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து இந்த அலுவலகத்தை சோதனை செய்ததில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் ஹாலில் சிமிண்ட் நிற ஜீன்ஸ் பேண்ட் மற்றும் நீல நிற கட்டம் போட்ட சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் மாணிக்கவாசகம் என்றும் அப்பா பெயர் சொக்கலிங்க பிள்ளை என்றும் கதவு எண்.7/10-A, அம்மன் கோவில் தெரு, கிருஷ்ணன் புதூர்,தோவாளை, என்றும் தான் ராம் ஆட்டோ கன்செல்ட்டிங்கில் வேலை பார்ப்பதாக தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த பேண்டின் வலது பக்க பாக்கெட்டில் கத்தையாக இருந்த பணத்தை எடுக்க சொல்லி எண்ணி பார்த்ததில் அதில் ரூ.12500/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு அவர் தான் பணிபுரியும் நிறுவனத்தில் பைனான்ஸ் போட வந்த வாகனங்களுக்கு அனுமதி சீட்டு கட்டணம் செலுத்த Password பெறுவதற்கு வந்ததாக தெரிவித்தார். அவர் அந்த பணத்திற்கு கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாத காரணத்தால் அவர் மேற்படி பணத்தை தன்னுடைய பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம்

என கருதி மேற்படி பணம் ரூ.12,500/- Annexure-II படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அதே அறையில் நீல நிற ஜீன்ஸ் பேண்ட் மற்றும் நாவல்பழநிற கட்டம் போட்ட சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் கணேசன் என்றும் அப்பா பெயர் பாலசுப்பிரமணியன், கதவு எண்.104-A, நடுத்தெரு, இறச்சகுளம் என்றும், தான் கணேஷ் ஓட்டுநர் பயிற்சிபள்ளியில் பணிபுரிவதாகவும் தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் அணிந்திருந்த சட்டையின் இடது முன் பக்க பாக்கட்டிலிருந்த பணக்கத்தையை எடுக்க சொல்லி எண்ணிபார்த்ததில் அதில் மொத்தம் ரூபாய் 2000/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு தான் இன்று ஓட்டுநர் தேர்வுக்கு அழைத்து வந்த திரு.ரத்தினம் என்பவர் எனது அலுவலகத்தில் கொடுப்பதற்காக தந்த பணம் என தெரிவித்தார். அவர் அலுவலகத்தினுள் நின்று கொண்டிருந்ததால் அவர் கூறிய பதில் சரியான முகாந்திரம் இல்லாததால் அவர் மேற்படி பணத்தை தான் பணிபுரியும் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.2000/- Annexure-III படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த காக்கி நிற பேண்ட் மற்றும் பச்சை நிற சட்டையுடன் ஒரு நபர் நின்று கொண்டிருந்தார். அவரை யார் என்று கேட்டதில் தன் பெயர் C. நாகராஜன் என்றும் அப்பா பெயர் சிதம்பரபிள்ளை, கதவு எண்.87, செந்தூரான் நகர், கோட்டார், நாகர்கோவில் என்றும், தான் கடந்த 8 வருடங்களாக எனக்கு தெரிந்த நபர்களுக்கு நாகர்கோவில் RTO அலுவகத்தில் உள்ள வேலைகளை செய்ய புரோக்கராக செயல்பட்டு வருவதாகவும் இன்று (30.09.2021) இவான்ஸ் பள்ளியின் பேருந்து TN 74 AE 0111 க்கு தகுதிசான்று புதுப்பிக்க வந்ததாகவும் தான் அலுவலகத்தில் நின்று கொண்டிருக்கும் போது தனக்கு தெரிந்த தன்னை போன்றே RTO அலுவலகத்தில் புரோக்கர் வேலை செய்து வரும் புத்தேரியை சேர்ந்த திரு.முருகன் என்பவர் தன்னிடம் இரண்டு பணகட்டுகளை கொடுத்து RTO

திரு.சந்திரசேகரிடம் கொடுக்க சொல்லி தந்தார் என்றும், அலுவலகத்தில் கூட்டம் அதிகமாகயிருந்தால் தான் அந்த பணத்தை பிறகு RTO விடம் கொடுக்கலாம் என தன்னுடன் வந்த வாகன ஓட்டுநர் திரு.குமாரிடம் கொடுத்து செல்லசுவாமி அவர்களிடம் கொடுக்க சொல்லி அனுப்பிவிட்டதாகவும், அதன்பிறகு தான் RTO அலுவலகத்துக்குள் நின்று கொண்டிருந்த போது லஞ்ச ஒழிப்பு குழுவினர் திடீர் ஆய்வு செய்ய வந்ததாகவும் தன்னையும் சோதனை செய்து விசாரித்தபோது தான் கொடுத்து அனுப்பிய பணத்தின் விபரத்தை ஒப்புக்கொண்டதாகவும் தெரிவித்தார். அதன் பிறகு ஆய்வு அலுவலரின் உத்தரவுபடி அவரது கைபேசி மூலம் ஓட்டுநர் குமாரின் ஓனர் செல்லசுவாமியை தொடர்பு கொண்டு அந்த பணத்தினை எடுத்து வர சொன்னார். அந்த பணத்தை திரு.செல்லசுவாமி அவர்கள் கொண்டுவந்து அதை அவர் ஆய்வு அலுவலர்களிடம் ஒப்படைத்தார். அதை எண்ணி பார்த்ததில் ரூ.68,000/- இருந்தது. எனவே அந்த பணமானது Annexure-I படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் திரு.செல்லசாமி அவர்களை விசாரணை செய்ததில் தான் இவான்ஸ் ஸ்கூல் தாளாளரின் தம்பி என்றும் இன்று தனக்கு சொந்தமான வாகனத்திற்கு தகுதி சான்று பெற வேண்டி ஓட்டுநர் குமார் என்பவர் மூலம் RTO அலுவலகத்திற்கு அனுப்பியதாகவும், அங்கு தனக்கு தெரிந்த RTO அலுவலக புரோக்கர் நாகராஜன் என்பவர் மூலம் தகுதி சான்று வேலைகள் முடித்து திரும்பி வரும்போது நாகராஜன் இரண்டு கட்டு ரூபாய் நோட்டுகளை என்னிடம் தர கொடுத்து அனுப்பினார் என்றும் பிறகு அவர் செல்போனில் அந்த பணத்தை கொண்டுவரும்படி கூறியதால் அந்த பணத்தை எடுத்துவந்து நாகராஜனுடன் நின்று கொண்டிருந்த ஆய்வுக்குழு அலுவலரிடம் ஒப்படைத்தார். மேலும் வட்டார போக்குவரத்து அலுவலக வளாகத்தில் நின்று கொண்டிருந்த வாகனங்கள் சோதனை செய்யப்பட்டது. அவற்றில் TN 74 AZ 4347 என்ற இருசக்கர வாகனத்தின் உரிமையாளரை அழைத்து அந்த வாகனத்தை சோதனை செய்த போது வாகனத்தில் கத்தையாக பணம் காணப்பட்டது. மேற்படி பணம் பற்றி வாகன உரிமையாளரிடம் விசாரித்த போது தன் பெயர் திரு. அரவிந்த் என்றும் அப்பா பெயர் கணேசன், கதவு எண்.2-41/3, நாழிவிளை, புதுத்தெரு, பள்ளவிளை பெருவிளை, நாகர்கோவில் என்று தெரிவித்தார். மேலும் தான் வட்டார போக்குவரத்து வளாகத்தில் RTO புரோக்கர்

திரு.முருகன் என்பவர் வைத்து நடத்திவரும் Xerox கடையில் வேலை பார்ப்பதாகவும் அவர் கூறும் RTO அலுவலகம் சம்மந்தப்பட்ட வேலைகளை செய்து வருவதாகவும் தெரிவித்தார். அந்த பணத்தை எடுக்க சொல்லி எண்ணிபார்த்ததில் அதில் மொத்தம் ரூபாய் 11,300/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளீர் என்று கேட்டதற்கு தான் RTO அலுவலக வளாகத்திலுள்ள அவர் கூறிய பதில் சரியான முகாந்திரம் இல்லாததால் அவர் மேற்படி பணத்தை தான் பணிபுரியும் ஓட்டுநர் பயிற்சிப்பள்ளி பணிகளை செய்து தரவேண்டி வட்டார போக்குவரத்து அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.1300/- Annexure-IV படி துணை ஆய்வு குழு அலுவலரால் மகசரில் கைப்பற்றப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது பெயர் சிராஜுத்தீன் என்றும் அப்பா பெயர் செய்யினுதீன் என்றும் கதவு எண்.108/B. PPS Puram. இனையம் புத்தன்துறை என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் வைத்திருந்த பையில் ரூ.10,000/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளார் என்று கேட்டதற்கு அவர் தான் ஓட்டிவந்த TN 74 AL 6088 என்ற ஆட்டோ விபத்துக்குள்ளாகிவிட்டது என்றும் அதற்கான Release Order வாங்கவும். ஓட்டுநர் உரிமத்தை பெறவும் வரும் போது ரூ.10,000/- கையில் வைத்திருந்தாக தெரிவித்தார். அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர் கைப்பட வாக்குமூலம் எழுதி பெற்று அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது பெயர் செல்வந்தன் என்றும் அப்பா பெயர் தங்ககண் என்றும் கதவு எண்.10/A. தெற்கு தெரு. பெரியவிளை. நாகர்கோவில் என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் வைத்திருந்த பையில் ரூ.700/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளார் என்று கேட்டதற்கு அவர் நான் எனது சகோதரனின்

வண்டிக்கு வரி செலுத்துவதற்காக கையில் வைத்திருந்தாக தெரிவித்தார். அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர் கைப்பட வாக்குமூலம் எழுதி பெற்று அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது பெயர் ஹிதாயத்துல்லா என்றும் கதவு எண்.83, தெலுங்கு செட்டிதெரு, கிருஸ்ணன் கோவில், நாகர்கோவில் என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் வைத்திருந்த பையில் ரூ.800/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளார் என்று கேட்டதற்கு அவர் நான் ஹெவி ஒட்டுநர் உரிம தேர்வுக்காக இன்று வந்ததாகவும் செலவுக்கு வைத்திருந்தாக தெரிவித்தார். அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர் கைப்பட வாக்குமூலம் எழுதி பெற்று அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது பெயர் கோபிசண்முகா என்றும் கதவு எண்.77/58, திலகர் தெரு, நாகர்கோவில் என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் வைத்திருந்த பையில் ரூ.500/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளார் என்று கேட்டதற்கு தான் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதாகவும் அங்கு வாகனமான TN 31 AH 1895 என்ற வாகனத்திற்கு பெர்மிட் போட வந்ததாகவும் மேற்படி பணம் ரூ.500/- தனது கை செலவிற்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர் கைப்பட வாக்குமூலம் எழுதி பெற்று அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது பெயர் ஐயப்பன் என்றும் கதவு எண்.100, திலகர் தெரு, நாகர்கோவில் என்றும் தான் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதாகவும் தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவரிடம் எந்த பணமும் இல்லை. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது

பெயர் சுரேஸ் என்றும் கதவு எண்.4/64-A, CTM புரம், பறக்கை என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் வைத்திருந்த பையில் ரூ.700/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளார் என்று கேட்டதற்கு தான் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதாகவும் அங்கு வாகனமான TN 74 AE 6266 என்ற வாகனத்திற்கு FC க்கு வந்ததாகவும் மேற்படி பணம் ரூ.700/- தனது கை செலவிற்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர் கைப்பட வாக்குமூலம் எழுதி பெற்று அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது பெயர் செந்தில் என்றும் கதவு எண்.281/A-7,Police Station Road, நாகர்கோவில் என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் வைத்திருந்த பையில் ரூ.500/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளார் என்று கேட்டதற்கு தான் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதாகவும் அங்கு வாகனமான TN 58 AX 1081 என்ற வாகனத்திற்கு Endorsement போட வந்ததாகவும் மேற்படி பணம் ரூ.500/- தனது கை செலவிற்காக வைத்திருந்தாக தெரிவித்தார். அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர் கைப்பட வாக்குமூலம் எழுதி பெற்று அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அதே அறையில் நின்று கொண்டிருந்த மற்றொரு நபரை விசாரித்த போது தனது பெயர் சிவராம் என்றும் கதவு எண்.1-A, Police Quaters, ஒழுங்கினசேரி என்று தெரிவித்தார். அவரை பரிசோதனை செய்ததில் அவர் வைத்திருந்த பையில் ரூ.500/- இருந்தது. மேற்படி தொகையை அவர் எதற்காக வைத்துள்ளார் என்று கேட்டதற்கு தான் நிதி நிறுவனத்தில் வேலை பார்த்து வருவதாகவும் அங்கு வாகனமான TN 74 AM 9088 என்ற வாகனத்திற்கு Endorsement போட வந்ததாகவும் மேற்படி பணம் ரூ.500/- தனது கை செலவிற்காக

வைத்திருந்தாக தெரிவித்தார். அந்த பணத்திற்கு அவர் சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர் கைப்பட வாக்குமூலம் எழுதி பெற்று அந்த பணம் அவரிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. கீழ்கண்ட பணம்/ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. 1).வட்டார போக்குவரத்து அலுவலக கிழக்கு பக்க மதில் சுவரை ஒட்டி தரையில் கிடந்த **ரூ.30,600** கைப்பற்றப்பட்டது. 2).வட்டார போக்குவரத்து அலுவலக ஹாலில் நடுவே பதிவறை அறைக்கும் எதிர்புறமுள்ள ரேக்கில் சுருட்டி வைக்கப்பட்டிருந்த **ரூ.1,200** கைப்பற்றப்பட்டது. 3).TNSTC பணியாளர்கள் அமர்ந்து அவர்கள் வாகனங்களுக்கு உரிய FC மற்றும் வரி செலுத்த வேலை செய்யும் மேஜையிலிருந்து எடுக்கப்பட்ட **ரூ.4,050/-** கைப்பற்றப்பட்டது. 4).வட்டார போக்குவரத்து அலுவலக வடகிழக்கு பக்கமுள்ள வடக்கு பார்த்த இரும்பு Shutter க்கு அருகில் வைக்கப்பட்டிருந்த அட்டை பெட்டியினுள் இருந்த பணம் ரூ.35,350/- கைப்பற்றப்பட்டது. 5).திரு.நாகராஜன்:ரூபாய்.68,000/- 6.திரு.மாணிக்கவாசகம்: ரூபாய் 12,500/- 7).திரு.கணேசன்: ரூபாய்.2,000/- 8).திரு.அரவிந்தன்: ரூபாய் 11,300/- ஆக மொத்தம் ரூ.1,65,000/- கைப்பற்றப்பட்டது. **ஆவணங்கள்:**1).வட்டார போக்குவரத்து அலுவலக பணியாளர்கள் வருகை பதிவேட்டின் செப்டம்பர் 2021 மாத ஜெராக்ஸ் நகல். 2).வட்டார போக்குவரத்து அலுவலக எல்காட் மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் வருகை பதிவேட்டின் செப்டம்பர் 2021 மாத ஜெராக்ஸ் நகல். 3).பணியாளர் ரொக்க கையிருப்பு பதிவேட்டின் 30.09.2021 தேதிய ஜெராக்ஸ் நகல். 4).வட்டார போக்குவரத்து அலுவலக 30.09.2021 தேதிய ரொக்க வரவு abstract report. 5).வட்டார போக்குவரத்து அலுவலர், நாகர்கோவில் அவர்களின் செயல் முறை ஆணை எண்.02/அ1/2021 (அலுவலக ஆணை 02/21) நாள் 02/21 ஜெராக்ஸ் நகல் மற்றும் ஆணை எண்.03/C1/2021 நாள் 09/21 ஜெராக்ஸ் நகல். 6). நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலக 30.09.2021 -ம் தேதிய Transaction Summary. 7).படைவீரர் கொடிநாள் பதிவேட்டின் 30.09.2021-ம் தேதிய பதிவுகளின் நகல். இந்த திடீர் சோதனைக்கு பிறகு வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.K.சந்திரசேகர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் Grade-I

திருமதி.N.பாத்திமா பர்வீன் ஆகியோர்களிடம் மேற்படி பணம் பற்றி கேட்டபோது. அந்த பணம் குறித்து தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும். வட்டார போக்குவரத்து அலுவலகத்தினுள் வெளிநபர்கள் வரும் போது அவர்கள் கையில் கொண்டுவரும் பணம் குறித்து பதிவிடும் பதிவேடு எதுவும் அலுவலகத்தில் தற்போதுவரை இல்லை என்றும் தெரிவித்தார்கள். இந்த திடீர் சோதனையின் மூலம் நாகர்கோவில் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் உள்ள வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.K.சந்திரசேகர், மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் Grade-I திருமதி.N.பாத்திமா பர்வீன் ஆகியோர்கள், இடைதரகர்களான (1) திரு.நாகராஜன், (2) திரு.மாணிக்கவாசகம், (3) திரு.கணேசன், (4) திரு.அரவிந்த் மற்றும் வெளி நபர்கள் மூலம் லஞ்சம் பெற்று அரசு பணிகள் செய்துவருவது தெரியவருகிறது. இதன்மூலம் அரசு அலுவலர்களுக்கு அரசு பணியை செய்வதற்கு இடைதரகர்கள் லஞ்சம் கொடுக்க தூண்டியுள்ள குற்ற செயகையும் புலனாகிறது. மேலும் பொது ஊழியர்கள் லஞ்சம் பெற்று குற்ற நடவடிக்கையில் (Criminal Misconduct) ஈடுபட்டுள்ளதும் தெரியவருகிறது. இந்த நடவடிக்கை குறிப்பு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட மடி கணிணி மூலம் தட்டச்சு செய்யப்பட்டு லஞ்ச ஒழிப்பு அலுவலகத்தில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரிண்டர் மூலம் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலகத்தில் உள்ள மின் இணைப்பு மூலம் பிரிண்ட் எடுக்கப்பட்டது. இந்த சோதனை இன்று 01.10.2021-ம் தேதி அதிகாலை 00.50 மணிக்கு முடிக்கப்பட்டது. இணைப்பு:Annexure I to VIII.

The original FIR along with original complaint petition sent to the CJM and Special Judge Court, Nagercoil and copies sent to the officers concerned.

Baluji
1.10.2021

(S. PETER PAUL DURAI)
Dy. Supdt. of Police,
VAC, Nagercoil
Kanyakumari District.